**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 86/2022**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 நாள் தரப்பு Pw1 சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வா.சா. 1 (மணி) நாள் 17. 11.2025**
**குறுக்கு விசாரணை ( 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்கத் தெரியும். பிரதிவாதிகளின் தாயார் பழனாள் (எ) பழனியம்மாள் தான் என்னிடம் பணம் வாங்கியதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு அறிமுகமானவர்கள் தான். பழனாள் (எ) பழனியம்மாள் 100 நாள் பணிக்கு சென்று வந்தார் என்ற விவர்ம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் இறக்கும்போது அவரது வயது 70 லிருந்து 80 இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுமார் 65 முதல் 70 வயதிற்குள் இருக்கும். மேற்படி பழனியம்மாள் இறந்த பின் தான் வழகது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பழனியம்மாள் கடன் வாங்கிய காலத்தில் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் நோய்வாய்பட்டு தான் இறந்தார் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் அவசர குடும்ப செலவு மற்றும் கட்டிட செலவுக்காக பணம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது. என்ன குடும்ப செலவு என என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் பற்றுகை கேட்ட சொத்தில் வாடகை தாரர்கள் உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழனியம்மாளுக்கு வாடகை வருமானம் ரூ.20,000/-வரும் என்றால் சரிதான்,ஆனால் எந்த சொத்தில் இருந்து வரும் என்று தெரியாது. பழனாள் (எ) பழனியம்மாள் வாடகை வருமானமும் , அவர் 100 நாள் வேலை திட்டத்தில் வருமானம் வரும் என்றும் அதனால் அவர் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பழனாள் (எ) பழனியம்மாள் 3 ம் பிரதிவாதியின் பாதுகாப்பில் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் தனியாக தான் இருந்தார். கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்தவர் எனக்கு அறிமுகமானவர்கள், தெரிந்தவர்கள் என்றால் சரியல்ல. நான் பணம் ரூ.3,50,000/-த்தை ரொக்கமாக தான் கொடுத்தேன். கடனுறுதி சீட்டு எழுதப்பட்ட தேதியில் தான் பணம்கொடுக்கப்பட்டது. ரூ.3,50,000 எனக்கு எவ்வாறு கிடைக்கப்

பெற்றது என்றால் எனது விவசாய வருமானம் மற்றும் ஆடு, மாடு வைத்திருந்ததன் பேரில் வந்த வருமானம் ஆகும். கடனுறுதி சீட்டை நான் வழக்கிற்காக பொய்யாக பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எந்தேந்த தேதிகளில் பழனியம்மாளிடம் பணம் கேட்டேன் என குறிப்பிட்டு தேதி சொல்ல முடியாது, ஆனால் பல முறை கேட்டுள்ளேன். பழனியம்மாள் உடல்நிலை சரியில்லாமல் தான் இருந்தார் என்றும் அவர் என்னிடம் பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பழனியம்மாள் ரேகை தான் வைப்பார் என்றும், அவர் கையொப்பம் செய்யும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. பற்றுகை செய்யப்பட்ட சொத்து நீங்கலாக பழனியம்மாளின் வேறு சொத்து தொடர்பான அசல் ஆவணமும் என் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பின் தான் இந்த வழக்கு கடன் பற்றிய விவரம் தெரியும் என்றால் சரியல்ல. அதை பெற்றுக் கொண்ட பின் பிரதிவாதிகள் என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாடகை வருமானத்தை கொண்டு கடனை கழித்து விடுவதாக கொள்வதாக சொன்னார்கள். பற்றுகை செய்யப்பட்ட சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. பற்றுகை செய்யப்பட்ட சொத்தின் மதிப்பு பல லட்சம் மதிப்பு பெறும் என்றும் அதை அபகறிக்க வேண்டி கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பழனியம்மாளுக்கு கொடுத்த கடனை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் விவசாய வருமானம் என்பதால் காண்பிக்கவில்லை. பழனாள் (எ) பழனியம்மாளுக்கு ரூ.3,50,000/- கடன் கொடுக்கவில்லை என்றும் மேற்படி தொகை கொடுக்க எனக்கு எவ்வித வசதி வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகறிக்க வேண்டி இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.17 17:07:22 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS